**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.17/2026 மற்றும் இ.ம.எண்.18/2026**

IN

**அசல் வழக்கு எண்.294/2016**

1. ரத்தினம் (இறப்பு)
2. சேர்மக்கனி
3. மாடசாமி
4. காமராஜ்
5. வேலாயுத நாடார் (இறப்பு)
6. கடற்கரை மூப்பனார்
7. சுப்பையா நாடார்
8. மயில்வேல் முருகன்
9. தெய்வேந்திரன்
10. வைத்திலிங்கம்
11. நடராஜன்
12. சாந்தி
13. தமிழ்ச்செல்வி
14. வள்ளியம்மாள்
15. முருகேஷ்வரி
16. ஈஸ்வரி
17. வேல்முருகன்
18. சின்னமணி ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. ஜெய ஸ்டெல்லா பிரிட்டோ
2. முருகையாசாமி
3. தெய்வக்கனி (இறப்பு)
4. செல்லத்துரை
5. கனகராஜ்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.08.06 16:27:55 +0530

6. அருமைராஜ்
7. முருகேசன்
8. சமுத்திரக்கனி
9. செல்லப்பூ ... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுக்களானது 16.07.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.புஷ்பராஜ் அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.F.X.யூஜின் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், மனுக்கள், எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

<u>பொதுவான உத்தரவு</u>

மனுதாரர்களால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறை விதி 76 மற்றும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 16 விதி 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் இருக்கும் செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரை மத்திய ஆவண காப்பகத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு வரவழைக்க உத்தரவிடவேண்டியும், செட்டில்மெண்ட் அலுவலர் மத்திய ஆவண காப்பகம் திருநெல்வேலி அவர்களை மனுதாரர்கள் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

<u>1) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களின் சுருக்கம்:–</u>

இவ்வழக்கில் வழக்கிடைச் சொத்தான சங்கரன்கோவில் தாலுகா, குலசேகரமங்கலம் கிராமம், நஞ்சை சர்வே எண்.399/2ல் உள்ள கிணறு சுற்றடி நிலம், பத்தல்நடை, வாய்க்கால் வழிநடை பாத்தியம் ஆதி பாத்தியஸ்தரான ராமசாமி நாடார், அரியவநாடார் மற்றும் மாரிமுத்து மூப்பனார் ஆகியோர்களுக்கு கூட்டாக பாத்தியப்பட்டு மேற்படியார்களின்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.08.06 16:28:02 +0530

அனுபவத்திலும் ஆளுகையிலும் இருந்து வந்தது என்றும், அதை நிரூபணம் செய்ய மேற்படி சொத்திற்கான செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் திருநெல்வேலி ஆவண காப்பகத்தில் இருந்து வருகிறது என்றும், மேற்படி ஆவணத்திற்கான சான்றிடப்பட்ட நகல் கோரி விண்ணப்பித்ததில் மேற்படி துறை அதிகாரி அவர்கள் நீதிமன்றம் தகுந்த உத்தரவிடும்பட்சத்தில் மேற்படி ஆவணத்தை சமர்ப்பிக்க தயாராக இருப்பதாக தெரிவித்துவிட்டார் என்றும், மேற்படி ஆவணம் மனுதாரர்களின் தரப்பு கட்சியை நிரூபிக்க உதவும் முக்கிய ஆதரவாகும் என்றும், ஆகையால், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் இருக்கும் செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரை மத்திய ஆவண காப்பகத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு வரவழைக்க உத்தரவிடவேண்டியும், செட்டில்மெண்ட் அலுவலர் மத்திய ஆவண காப்பகம் திருநெல்வேலி அவர்களை மனுதாரர்கள் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2) **4ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1, 2 மற்றும் 5 முதல் 9 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரைகளின் சுருக்கம்:-**
**(இ.ம.எண்.17/2026 ல் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை இ.ம.எண்.18/2026 ன் எதிருரையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது)**

மனுதாரர்களின் மனுக்கள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், தபசில் சொத்து அமைந்துள்ள கிராமம் தென்காசி மாவட்ட ஆளுகைக்குள் அமைந்துள்ளது என்றும், எனவே, மனுதாரர் வரவழைக்க கோரும் ஆவணம் தென்காசி மாவட்ட ஆவண காப்பக பிரிவில் தான் இருந்து வருமே தவிர, அது திருநெல்வேலி மாவட்ட ஆவண காப்பகத்தில் இருந்து வருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்றும், எனவே, மனுதாரர்களின் மனுக்களானது தவறான அலுவலகத்தை சுட்டிக்காட்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அது இந்நீதிமன்றத்தில் நிலைநிற்கத்தக்கதில்லை என்றும், மனுதாரர் வரவழைக்க கோரும் ஆவணம் ஒரு Public Document என்றும், அதனை பொறுத்து உரிய அலுவலகத்தில் நேரடியாக மனு தாக்கல் செய்து, அதன் மூலமாக

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.08.06 16:28:11 +0530

ஆவணங்களை பெற சட்டத்தில் வழிவகைகள் உள்ள நிலையில், CRP பிரிவு 76 ன்படி மனு தாக்கல் செய்ய இயலாது என்றும், மேலும், மனுதாரர் குறிப்பிடும் ஆவணம் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக எல்லைக்குள் அமைந்துள்ள நிலையில், இந்த மனுதாரர் எவ்விதம் திருநெல்வேலி மாவட்ட ஆவண காப்பக பிரிவில் மனு செய்தார் என்பதை கண்டிப்பாக நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், மனுதாரர் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இவ்வழக்கில் பல்வேறு மனுக்களை தாக்கல் செய்து, வழக்கினை காலதாமதம் செய்து வந்து தற்போது இம்மனுவின் மூலமாக மென்மேலும் காலதாமதம் செய்ய வேண்டுமென்ற Malafide எண்ணத்தோடு மோசடியாக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே இம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரர்களால் இம்மனுக்களானது, திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் இருக்கும் செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரை மத்திய ஆவண காப்பகத்திலிருந்து இந்நீதிமன்றத்திற்கு வரவழைக்க உத்தரவிடவேண்டியும், செட்டில்மெண்ட் அலுவலர் மத்திய ஆவண காப்பகம் திருநெல்வேலி அவர்களை மனுதாரர்கள் தரப்பில் சாட்சியாக விசாரணை செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.08.06 16:28:18 +0530

6) அசல் வழக்கானது வாதிகளால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7) மேலும், அசல் வழக்கு மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு கூடுதல் சாட்சி விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில், இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

8) இம்மனுக்களுக்கு 1, 2, 4 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தபசில் சொத்து அமைந்துள்ள கிராமம் தென்காசி மாவட்ட ஆளுகைக்குள் அமைந்துள்ளது என்றும், எனவே, மனுதாரர் வரவழைக்க கோரும் ஆவணம் தென்காசி மாவட்ட ஆவண காப்பக பிரிவில் தான் இருந்து வருமே தவிர, அது திருநெல்வேலி மாவட்ட ஆவண காப்பகத்தில் இருந்து வருவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்றும், எனவே, மனுதாரர்களின் மனுக்களானது தவறான அலுவலகத்தை சுட்டிக்காட்டி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அது இந்நீதிமன்றத்தில் நிலைநிற்கத்தக்கதில்லை என்றும், மனுதாரர் வரவழைக்க கோரும் ஆவணம் ஒரு Public Document என்றும், அதனை பொறுத்து உரிய அலுவலகத்தில் நேரடியாக மனு தாக்கல் செய்து, அதன் மூலமாக ஆவணங்களை பெற சட்டத்தில் வழிவகைகள் உள்ள நிலையில், CRP பிரிவு 76 ன்படி மனு தாக்கல் செய்ய இயலாது என்றும், மேலும், மனுதாரர் குறிப்பிடும் ஆவணம் தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக எல்லைக்குள் அமைந்துள்ள நிலையில், இந்த மனுதாரர் எவ்விதம் திருநெல்வேலி மாவட்ட ஆவண காப்பக பிரிவில் மனு செய்தார் என்பதை கண்டிப்பாக நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், மனுதாரர் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இவ்வழக்கில் பல்வேறு மனுக்களை தாக்கல் செய்து, வழக்கினை காலதாமதம் செய்து வந்து தற்போது இம்மனுவின் மூலமாக மென்மேலும் காலதாமதம் செய்ய வேண்டுமென்ற Malafide எண்ணத்தோடு மோசடியாக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.08.06 16:28:24 +0530

கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

9) இந்நீதிமன்றமானது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால், வழக்கில் எழுந்துள்ள உண்மையான சர்ச்சைக்குரிய பிரச்சினைகளை முழுமையாகவும் பயனுள்ள முறையிலும் தீர்மானிப்பதற்குத் தேவையான ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை நீதிமன்றத்தின் முன் கொண்டு வருவதற்கு தரப்பினருக்கு உரிய வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டக் கொள்கையாகும்.

10) மனுதாரர்கள் வரவழைக்கக் கோரும் செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் வழக்கில் உள்ள உரிமை மற்றும் பாத்திய உரிமை தொடர்பான சர்ச்சையை தீர்மானிப்பதற்கு தொடர்புடைய ஆவணம் என கட்சி எடுத்துள்ளனர். அந்த ஆவணத்தின் ஏற்புத்தன்மை (Admissibility), நிரூபண மதிப்பு (Evidentiary Value) மற்றும் இறுதி சான்று மதிப்பு ஆகியவை விசாரணையின்போது சட்டப்படி தீர்மானிக்கப்பட வேண்டியவை ஆகும். எனவே, வெறும் ஆவணத்தை வரவழைக்கும் நிலையிலேயே அதன் சான்று மதிப்பை முன்கூட்டியே இந்நீதிமன்றத்தால் ஆராய இயலாது.

11) எதிர்மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள ஆவணம் திருநெல்வேலி மாவட்ட ஆவணக் காப்பகத்தில் இல்லை என்றும், அது தென்காசி மாவட்டத்தில் மட்டுமே இருக்கும் என்றும் ஆட்சேபனை எழுப்பியுள்ளனர்.

12) இதுகுறித்து, சம்பந்தப்பட்ட அலுவலகம் ஆவணத்தை சமர்ப்பிக்க இயலுமா என்பது சம்மன் பிறப்பிக்கப்பட்ட பின்னரே இந்நீதிமன்றத்திற்கு தெரியவரும். ஆவணம் அங்கு இல்லையெனில், அதனை சம்பந்தப்பட்ட அலுவலர் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கலாம். எனவே, இந்தக் காரணத்தின் அடிப்படையில் மனுதாரர்களின் மனுவை நிராகரிக்க வேண்டிய அவசியம் இல்லை.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.08.06 16:28:30 +0530

13) மேலும், மனுதாரர்கள் தரப்பில் குறிப்பிட்ட ஆவணத்தை நேரடியாகப் பெற இயலவில்லை என்றும், நீதிமன்றம் வாயிலாகவே வரவழைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். சம்பந்தப்பட்ட அலுவலரை சாட்சியாக விசாரிக்கவும், ஆவணத்தை நீதிமன்றத்திற்கு வரவழைக்கவும் அனுமதி வழங்குவதால் மட்டுமே எதிர்மனுதாரர்களுக்கு ஈடுசெய்ய முடியாத பாதிப்பு ஏற்படும் என்று கருத முடியாது. ஆவணத்தின் ஏற்புத்தன்மை, நிரூபண மதிப்பு மற்றும் பொருத்தம் ஆகிய அனைத்தையும் எதிர்மனுதாரர்கள் விசாரணையின்போது சட்டப்படி ஆட்சேபிக்க முழு உரிமை பெற்றுள்ளனர்.

14) எனவே, வழக்கில் எழுந்துள்ள உண்மையான சர்ச்சைக்குரிய பிரச்சினையை முழுமையாகவும் பயனுள்ள முறையிலும் தீர்மானிப்பதற்கும், நீதியின் நலனைக் கருத்தில் கொண்டும், மனுதாரர்கள் கோரியபடி சம்பந்தப்பட்ட செட்டில்மெண்ட் ரிஜிஸ்டரை நீதிமன்றத்திற்கு வரவழைக்கவும், சம்பந்தப்பட்ட அலுவலரை மனுதாரர்கள் தரப்பில் சாட்சியாக விசாரிக்க அனுமதிக்கவும் இம்மனுக்கள் தகுதியானவை என இந்நீதிமன்றத்தால் இம்மனுக்களில் முடிவு காணப்படுகிறது.

15) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து, இம்மனுக்களானது நீதியின் நலன் கருதி அனுமதிக்கப்பட்டு இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

**16) இறுதியாக**

**இ.ம.எண்.17/2026**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.08.06 16:28:36 +0530

**<u>இ.ம.எண்.18/2026</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.08.06 16:28:42 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :–**

– இல்லை –

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.08.06 16:28:47 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

முு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

I.A.No.17/2026 and
I.A.No.18/2026
in
O.S.No.294/2016

உத்தரவு (Draft / Fair)

நாள் : 06.08.2026